www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

### சன்சோனிக் கமிஷன்

பொலிஸ் அதிகாரி குருசாமியின் வீடு யாழ்ப்பாணத்தில் ஓட்டுமடம் என்ற இடத்தில் இருந்தது.

1977ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பொலிசார் வன்முறை நடவடிக்கைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண நகரமே சுடுகாடாக மாறியது.

பொலிசாரின் மீது யாழ் மக்கள் தீராத வெறுப்புக்கொள்ளக் காரணமாக அமைந்த சம்பவங்களில் 1977ம் ஆண்டின் அத்துமீறல்கள் முக்கியமானவை.

ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான அரசு சன்சோனிக் கமிஷனை நியமித்தது.

போன்ற அத்துமீறல்களில் ஈடுபட்டதாக அவர் சாட்சி கொன்னார்.

இன்ஸ்பெக்டர் குருசாமியும் சன்சோனிக் கமிஷனால் அழைக்கப்பட்டார்.

பொலிசார் அத்துமீறல் எவற்றிலும் ஈடுபடவில்லை என்று நிரூபிக்கும் விதமாக சாட்சி சொன்னார் குருசாமி.

பத்திரிகைகளில் குருசாமியின் சாட்சியத்தை படித்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தீவிரவாத இளைஞர்கள் அவரை ஒரு துரோகி என்று குறித்துக்கொண்டனர்.

அரசு குருசாமிக்குரிய பாதுகாப்பை அதிகரித்தது.

தானியங்கி இயந்திரத் துப்பாக்கி ஒன்றுடன் யாழ்ப்பாணத்தில் நடமாடினார் குருசாமி.

குட்டிமணி குழுவினர் குருசாமி வீட்டிற்கு சென்றபோது எதிர்பாராத ஒரு வாய்ப்பு அவர்களுக்கு சாதகமாக அமைந்தது.

### ஈழ விடுதலை இயக்கம்

குட்டிமணியும் அவரது ஆதரவாளர்களும் தனி ஒரு பிரிவு.

இளைஞர் பேரவையினர் மற்றொரு பிரிவு. இதற்குள் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தனி ஒரு பிரிவு.

இளைஞர் பேரவையில் இருந்து பிரிந்ததுதான் தமிழ் ஈழ விடுதலை இயக்கம். (இன்றைய ரெலோ அல்ல)

இதன் தலைவராக இருந்தவர் த.முத்துக்குமாரசாமி. ஈழ விடுதலை இயக்க இளைஞர்கள் மத்தியில் சிறைக்குள் சாதி முரண்பாடுகள்.

தமக்குள்ளாகவே முரண்பட்டுக் கொண்டு முட்டி மோதினார்கள்.

1976ல் புலோலி வங்கிக் கொள்ளையை நடத்தியது ஈழ விடுதலை இயக்கம்தான்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதனால் கொள்ளையில் ஈடுபட்ட அனைவருமே மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்தவர்களில் பலர் வாய்வீச்சில் கெட்டிக்காரர்களாக இருந்தார்களே தவிர செயல் முனைப்பு இருக்கவில்லை.

இதனால் புலிகளோ, குட்டிமணி குழுவினரோ அவர்களை நம்பவில்லை. நல்லுறவுகளும் இருக்கவில்லை.

காலக்கிரமத்தில் ஈழ விடுதலை இயக்கம் தானாகவே அழிந்தது. அதன் முக்கியஸ்தர்கள் மக்களையும், தமது உறுப்பினர்களையும் கைவிட்டு ஒதுங்கினார்கள்.

புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி.-போன்ற பல இயக்கங்களோடு இழுபட்டார். எங்கும் நிரந்தரமாக தங்க அவரது குணவிசேஷம் இடமளிக்கவில்லை.

தற்போது புலிகளுக்கு ஆதரவாக லண்டனில் பேசித் திரிவதாக தகவல். இவரைப் புலிகள் நம்புவதில்லை என்பது வேறு விவகாரம்.

ஈழவிடுதலை இயக்கத்தில் இருந்தவர்களில் க. பத்மநாபா மட்டுமே தொடர்ச்சியாகப் போராட்டத்தில் பங்கு கொண்டார்.பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலதிபராக இருந்தவரும் அவரே!

### இந்திய எதிர்ப்பு

வரதராஜப் பெருமாளும் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்தவர். பின்னர் ஒதுங்கிக்கொண்டு பல்கலைக் கழக விரிவுரையாளராக இருந்தவர். புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டு வந்தவர்.

சகல இயக்கங்களுடனும் தனக்கு உறவு உண்டு. தான் ஒரு நடுநிலைவாதி என்று கூறிவந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கு கார்ல் மாக்ஸ் பற்றிய வகுப்பு எடுக்க மட்டக்களப்புக்கு அழைக்கப்பட்டார்.

அங்குவைத்து பொலிசாரால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கைதானபோது வரதரும் கைதானார்.

# உறுதியற்ற தலைமையால் உருக்குலைந்த இயக்கம்!

## ஓடினார்கள்–ஓடினார்கள்..... பேசியதை மறந்து ஓடினார்கள்!

விசாரணை நடப்பதாக காட்டவும், மக்களது கோபத்தை தணிக்கவும் உபயோகமான ஒரு தந்திரம் கமிஷன் அமைப்பதுதான்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அநேகமான விசாரணைக் கமிஷன்களின் நோக்கம் அதுதான்.

கமிஷன் அமைக்கும் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

கமிஷனின் விசாரணையில் கண்டறியப்படும் உண்மைகள் மட்டும் ஒரு ஓரத்தில் தூக்கிப்போடப்பட்டுவிடும்.

சன்சோனிக் கமிஷனும் அவ்வாறான நோக்கத்தில் நியமிக்கப்பட்ட ஒன்றுதான்.

எனினும், சன்சோனிக் கமிஷன் முன்பாக சொல்லப்பட்ட சாட்சியங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

### குருசாமியின் சாட்சி

பொலிசார் எப்படியெல்லாம் சட்டத்தை மீறி நடந்துகொண்டனர் என்பதையெல்லாம் மக்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக அது அமைந்தது.

அந்தவகையில் சன்சோனிக்கமிஷன் விசாரணை அரசுமீதான – அதன் பொலிஸ்படையினர் மீதான அதிருப்தியை உருவாக்க உதவியதுதான் போராட்டத்திற்கு கிடைத்த இலாபம்.

பொலிஸ் அதிகாரிகளும் விசாரிக்கப்பட்டனர். இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளை நியாயமாக சாட்சி சொன்னார்.

சீருடையில்– இலக்கத்தகடுகள் இல்லாத பொலிசார் தீவைப்புக்கள்

குருசாமியின் வீட்டுக்கு அருகில் திருமண வைபவம் ஒன்று நடந்துகொண்டிருந்தது.

திருமண வீட்டார் பட்டாசுகளை கொளுத்தி ஆரவாரித்துக் கொண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் குருசாமி வீட்டிற்குள் சென்ற குட்டிமணி குழுவினரில் ஒருவர் ஒபரோய் தேவன்.

கொழும்பில் உள்ள ஒபரோய் ஹோட்டலில் பணியாற்றியவர் என்பதால் அப்படி அழைக்கப்பட்டார்.

ஒபரோய் தேவன்தான் குருசாமியை சுடவேண்டும் என்பதுதான் திட்டம்.

குருசாமி எதிரில் வர ஒபரோய் தேவனைப் பார்த்து 'சுடடா' என்றார் குட்டிமணி.

முதல் சம்பவம், முதல் அனுபவம் என்பதால் தேவனுக்குப் பதட்டம்! தயங்கி நின்றார்!!

"சுடடா டேய்" என்றார் இரண்டாவது தடவையாக குட்டிமணி.

'சுட்டார்' ஒபரோய் தேவன்.

வெளியே-திருமண வைபவத்தில் கேட்ட பட்டாசு சத்தங்களோடு சத்தமாக துப்பாக்கி வேட்டொலிகளும் சேர்ந்துகொண்டன.

எவ்வித இடையூறும் இல்லாமல் குட்டிமணி குழுவினர் தப்பிச் சென்றுவிட்டனர்.

**'இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை!' என்ற செய்தி மறுநாள் 'ஈழநாடு' பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது!**

குருசாமி கொலைக்குப் பின்னர் குட்டிமணி குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு நடவடிக்கை குமார் கொலை! குமார் ஓய்வு பெற்ற ஒரு பொலிஸ் அதிகாரி.



வரும் வாரம்

**இலங்கை அரசை உலுக்கிய மிகப்பெரிய நடவடிக்கை சி.ஐ.டி.இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினரின் படுகொலை! அவர்கள் சிக்கியதே ஒரு தனிக்கதை! அதை அறிய வரும் வாரம்வரை பொறுத்துக்கொள்க!**

வடமராட்சியில் உள்ள தீவிரவாத இளைஞர்கள் பற்றிய விபரங்களை ஓய்வு பெற்ற பின்னரும் திரட்டிவந்தார் என்று சந்தேகிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த நடிவடிக்கைகளையடுத்து குட்டிமணி பொலிசாரால் தீவிரமாகத் தேடப்பட்டார்.

### சிறைக்குள் பிரிவுகள்

ஏற்கனவே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு குட்டிமணி சிறையில் இருந்திருக்கிறார்.

குட்டிமணி பற்றிய ஒரு சம்பவம்- சிறையில் இருந்தபோது குட்டிமணியிடம் சிறையில் கூட இருந்த ஏனைய தமிழ் இளைஞர்களுக்கு பயம்.

குத்துச்சண்டை போன்றவற்றில் குட்டிமணி சூரன் என்று பேர் எடுத்திருந்தார்.

அச்சமயம் ஆனந்தன் என்னும் தமிழ் இளைஞரும் தீவிரவாத

## குறியைத்தேடி பிரபா கொழும்பு வந்தார்

நடவடிக்கைகள் காரணமாக சந்தேகிக்கப்பட்டு சிறையில் இருந்தவர்.

குட்டிமணி ஒரு பயில்வான் போன்ற தோற்றத்தோடு இருப்பார்.

ஆனந்தனுக்கு பலவீன உடல்போன்ற தோற்றம்.

ஒருநாள் குட்டிமணிக்கும் ஆனந்தனுக்கும் தகராறு. தகராறு முற்றி கைகலப்பாகிவிட்டது. ஆனந்தன் குட்டிமணியை அடித்து வீழ்த்திவிட்டார்.

குட்டிமணி அதனை எதிர்பார்க்கவில்லை. சிறையைவிட்டு வெளியே சென்றவுடன் ஆனந்தனை ஒருவழி பண்ணப்போவதாக குட்டிமணி சபதம் செய்தார்.

ஒரே இலட்சியத்திற்காக சிறைசென்றபோதும் உள்ளே முரண்பாடுகளும் மோதல்களும் மட்டுமல்ல; சாதிப்பிரிவுகள்கூட தலைதூக்கியிருந்தன என்பதுதான் மாபெரும் வேதனை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையில் முக்கியமான மூவர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன்.

காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்தனும் வாய்த்தர்க்கப்பட்டுக் கொள்வார்கள். சோற்றுக் கோப்பைகளும் பறக்கும். மாவை சேனாதிராஜா மட்டுமே பிரச்சனைகளில் பட்டுக்கொள்ளாமல் இருந்தவர்.

### வியாபாரிகளான போராளிகள்

சிலர் நாட்டைவிட்டு சென்று வெளிநாடுகளில் வியாபாரிகளானார்கள். சிலர் உள்நாட்டிலேயே வியாபாரம் செய்தார்கள்.

தமிழர் கூட்டணியை விமர்சித்து ஈழ விடுதலை இயக்கம் உருவாகியபோது அதில் முக்கியமான ஒருவர் ஹென்ஸ் மோகன். புலோலி வங்கிக் கொள்ளையிலும் சம்பந்தப்பட்டவர்.

இதே ஹென்ஸ் மோகன் பின்னர் யாழ் பா.உறுப்பினராக இருந்த யோகேஸ்வரனுடன் தன்னை நெருக்கமானவராகக் காட்டிக்கொண்டார். அதன்மூலம் யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு முன்புறம் கடை ஒன்று நிறுவி சொந்த வியாபாரத்தை வளப்படுத்திக் கொண்டார். இப்போது வெளிநாட்டில் இருக்கிறார்.

மற்றொருவர் சந்திரமோகன். இவரும் புலோலிக் கொள்ளையில் பங்குகொண்டவர். பின்னர் யாழ்ப்பாணத்தில் கைக்கடிகார கடை நடத்திவிட்டு வெளிநாடு பறந்துவிட்டார்.

தங்கமகேந்திரன் என்று ஒருவர். திருமலையைச் சேர்ந்தவர். புலோலி வங்கிக் கொள்ளையில் கிடைத்த நகையில் ஒரு பகுதியை விழுங்கியவர். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் சேர்ந்து கொண்டார்.

அவர் தங்குவதற்காக வீடொன்று ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. அது ஒரு பீடிக் கம்பனி உரிமையாளரது வீடு. மானிப்பாயில் இருந்தது. அங்கு ஒரு அறையில் இருந்த பெறுமதியான உடமைகள், மறைத்துவைக்கப்பட்டிருந்த வீட்டு உரிமையாளரது நகைகள் போன்றவற்றை இயக்கத்திற்கே தெரியாமல் கையாடினார்.

நடவடிக்கை எடுக்க விசாரித்தபோது 'கொள்கை முரண்பாடு' என்று விலகிவிட்டார்.

பெண்களும் போராட்டத்திற்கு வந்துவிட்டார்கள் என்று கூட்டணி தலைவர்களாலும் சுட்டிக்காட்டப்பட்ட ஒருவர் அங்கையற்கண்ணி.

இவரும் ஈழ விடுதலை இயக்கத்தில் முக்கியமான ஒருவராக நடந்து கொண்டவர்.

அங்கையற்கண்ணிக்கு பெண் விடுதலை பற்றியும் தெரியாது. இயக்கத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரியாது.

ஈழ விடுதலை இயக்கம் அழிந்த பின்

அப்போது டக்ளஸ் தேவானந்தா சிறையில் இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழு உறுப்பினராக இருந்த தேவானந்தாவால் வரதர் இயக்கத்தில் சேர்க்கப்பட்டார்.

இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் 1980–82களில் தத்துவ விளக்கம் சொன்னவர் வரதராஜப் பெருமாள்.

அவரே பின்னர் இந்தியாவின் ஆசிர்வாதம் பெற்ற வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக மாறியதுதான் சுவாரசியம்.

ஈழவிடுதலை இயக்கம் பற்றியும் அதன் முக்கியஸ்தர்கள் பற்றியும் இங்கே குறிப்பிடக் காரணம் இருக்கிறது.

### செயலிழந்த இயக்கம்

அந்த இயக்கம் மட்டுமே ஆயுதப் போராட்டம் பற்றிய வாய்வீச்சுக்களோடு உருவாகி அழிந்துபோன வரலாற்றைக் கொண்டதாகும்.

அந்த இயக்கத்தில் இருந்தவர்களில் பலர் பிரபலமான பெயர்கள் உடையவர்களாக இருந்தார்கள்.

அந்தக் காலத்தில் புலிகளில் இருந்தவர்கள் பற்றியோ, குட்டிமணி குழுவில் இருந்தவர்கள் பற்றியோ வெளியே தெரியாது.

ஆனால், அவர்கள் காரியத்தில் கண்ணாக இருந்தார்கள்.

ஈழவிடுதலை இயக்கத்தில் பத்துப் பேர் இருந்தால் 9 பேர் தலைவர்கள்.

யாரை யார் கட்டுப்படுத்துவது என்பதுதான் பிரச்சனை.

ஒரே ஒரு கொள்ளை நடவடிக்கையோடு சுருண்டு போனார்கள்.

உறுப்பினர்கள் விலகிச் சென்றமை சகல இயக்கங்களிலும் நடந்திருக்கிறது.

ஆனால், இயக்கத்தின் தலைவர் உட்பட முக்கியமானவர்களே விலகி ஓடியது ஈழ விடுதலை இயக்கத்தில் மாத்திரமே நடந்தது.

அதுவும் போராட்டம் பற்றிய நம்பிக்கைகள் நிலவிய வளர்ச்சிக் கட்டத்தில் கஷ்டங்களைத் தாங்காமல் ஓடினார்கள் என்பதுதான் முக்கியமானது.

அந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயலிழந்த பின்னர் குட்டிமணி–தங்கத்துரை குழுவினர் அந்தப் பெயரை தமது குழுவுக்கு சூட்டிக்கொண்டனர்.

தற்போதுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) குட்டிமணி-தங்கத்துரை குழுவினரால் உருவாக்கப்பட்டதாகும்.

ஆனால் இன்றைய ரெலோ அமைப்பினர் தமது பிரசார பாடல் கசெட் ஒன்றில் 'முதன் முதல் தோன்றிய இயக்கம் தமிழீழ விடுதலை இயக்கம்' என்று ஒரு வரியையும் சேர்த்துக் கொண்டததுதான் வேடிக்கை.

### கொழும்பில் பிரபாகரன்

குட்டிமணி குழுவினர் பொலிசாரால் தேடப்பட்டுக் கொண்டிருந்தபோது, புலிகள் துரோகிகள் பட்டியலில் இருந்த ஒருவரை குறிவைத்தனர்.

பிரபாகரன் குறியைத் தேடி கொழும்புக்கு வந்தார்.

கொழும்பில் அவருக்காக இன்னொருவர் காத்திருந்தார்.

(தொடர்ந்து வரும்)

### எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

இவ்வாறான நிலையில் புலிகளோடு இரகசிய ஒப்பந்தம் செய்யக்கூடிய சாத்தியம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

அரசாங்க தரப்புக்குள்ளும் அதற்கு ஆதரவிருக்காது.

தனக்கு விரோதமான ஒரு அமைப்போடு இலங்கை அரசு இரகசிய ஒப்பந்தம் செய்வதை இந்தியாவும் விரும்பாது.

போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கே படையினரின் சம்மதத்தை பெறவும், அவர்களை திருப்தி செய்யவும் நீண்ட முயற்சி அரசுக்கு தேவைப்பட்டிருக்கிறது.

வடக்கே பற்றிகளைக் கொண்டு செல்வதைக்கூட படையினரால் அனுமதிக்க முடியாதிருக்கிறது. கவனமாக எண்ணிப் பார்த்துத்தான் அனுமதிக்கிறார்கள்.

அரசாங்கத்தால் கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது. ஏனெனில் நாளை மீண்டும் போர் உக்கிரமானால் படையினர் அரசு மீதும் கோபம் கொள்வார்கள். "தடுக்காதே என்று சொன்னீர்களே இப்போது நாம் தானே அதன் விளைவுகளை சந்திக்கிறோம்" என்று படையினர் கூறக்கூடும்.

பற்றிகள் விடயத்திலே கூட நிலமை இப்படியிருக்கும் போது, படையினரை அனுசரித்துப்போக வேண்டியுள்ள போது ஒரு பகுதியை புலிகளிடம் விட்டுக்கொடுக்கும் ஒப்பந்தம் செய்ய 'முடியுமா? முடியாது!

புலிகளும் இரகசிய ஒப்பந்தம் எதற்கும் முன்வரப்போவதில்லை.

அரசாங்கத்தால் ஆகக்கூடிய பட்சம் எவ்வாறான திட்டத்தை முன்வைக்க முடிகிறது என்பதை வெளிப்படுத்திவிட்டு, அதில் தமது நிலைப்பாட்டை தமிழர்களும், வெளியுலகும் ஏற்கக்கூடியதாக முன்வைப்பதே பேச்சு தொடர்பான புலிகளது சாணக்கியமான நடவடிக்கையாக அமையும்.

அதற்கிடையே நீண்டகாலப் போரினால் களைப்படைந்துள்ள மக்கள் மூச்சு விட்டுக் கொள்ளக்கூடிய போர்நிறுத்தம் புலிகளுக்கு எந்தவகையிலும் பாதகமாக அமையாது.

புலிகள் போர் நிறுத்தத்தை வற்புறுத்தி வருகிறார்கள். அதனால் அரசு போர் நிறுத்தத்தை அறிவித்தாலும் புலிகளது கோரிக்கையை ஏற்று செய்யப்பட்ட ஒன்றாகவே அது கருதப்படும்.

போர்நிறுத்தம் மூலமான அரசியல் இலாபத்தையும் அரசு தனக்காக்கிக் கொள்ளமுடியாது.

அதுமட்டுமல்லாமல், அரசுக்கு அனுப்பும் கடிதங்கள், அரசால் அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் புலிகளால் பொதுமக்கள் பார்வைக்காக வெளிப்படுத்தப்படுகின்றன.

தமது நடவடிக்கைகள் மீது மக்களுக்கு சந்தேகம் வரக்கூடாது என்பதில் புலிகள் மிகுந்த கவனத்தோடு செயற்படுவதையே அவை வெளிப்படுத்துகின்றன.

தமது கொள்கையில் உறுதியாக நிற்கும் ஒரு அமைப்பு அக் கொள்கைமீது தனக்கே நம்பிக்கையில்லை என்று மக்கள் நினைக்குமளவுக்கு செயற்படாது.

கரும்புலிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஒரு தலைவர் இரகசிய ஒப்பந்தம் செய்ய முன்வரமுடியாது. தனது தலையில் தானே மண் அள்ளிப் போடும் காரியத்தை பிரபா செய்வார் என்று நினைக்க இடமில்லை!

எனவே- இரகசிய ஒப்பந்தச் செய்தி அற்புதமான வதந்தி என்பதில் ஐயமில்லை.

□□